**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 165/2021**

**Deposition of P.W.** 1

Name : மஞ்சு

S/o, D/o, W/o : செந்தில்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:11.12.2024

Accused Present.

<u>முதல் விசாரணை</u>–

நான் சுருளோட்டில் வசித்து வருகிறேன். சாட்சி செந்தில் எனது கணவர். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். எதிரியின் மனைவியை சஜீவ் என்பவர்அழைத்து சென்று விட்டார். அது பற்றி எங்களுக்கு எதுவும் தெரியாது. அதற்கு எனது கணவர் செந்தில் தான் காரணம் என பல முறை எதிரி எனது கணவரை மிரட்டி வந்தார். 19.04.2021ம் தேதி இரவு 10.00 மணிக்கு பால்வெட்டுவதற்கு ஆட்களை கூப்பிட சென்று விட்டு வரும் போது பொன்மனை சந்திப்பில் வைத்து எனது கணவரை எதிரி வெட்டுக்கத்தியால் இடதுபக்க தலையில் வெட்டினார். அங்கிருந்து மோட்டார் சைக்கிளில் எதிரி தப்பி சென்று விட்டார். அங்கிருந்த நபர்கள் எனது கணவரை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர். குலசேகரத்திலிருந்து ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனைக்கு எனது கணவரை அனுப்பி வைத்தார்கள். மணியன் என்பவர் இரவு 10.30 மணிக்கு

மேற்படி தகவலை என்னிடம் சொன்னார். நான் ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனைக்கு போனேன். குலசேகரம் காவல்நிலையத்தில் புகார்மனு கொடுத்தேன். அந்த புகார் மனு அ.சா.ஆ.1 போலீசார் என்னை விசாரித்தார்கள்

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**</u>

எனக்கு தகவல் கிடைத்து நான் ஆசாரிப்பள்ளம்அரசு மருத்துவமனைக்கு செல்லும் போது இரவு 11.00 மணி இருக்கும். ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனையில் என் கணவர் சுயநினைவோடு இருந்தார் என்றால் சரியல்ல. அன்று இரவு மருத்துவமனைக்கு போலீசார் வந்தார்கள். போலீசார் ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனையில் வைத்து எழுதி வாங்கினார்கள். போலீசார் எழுதி வாங்கியதில் கையொப்பம் செய்து கொடுத்தேன். எதிரி எனது கணவரை மிரட்டியது எனக்கு நேரடியாகத் தெரியாது. அ.சா.1 புகார் மனுவில் இன்று என்று எழுதி (19.04.2021) என எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.1ல் இரண்டு இடங்களில் வெட்டியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரில் 3 இடங்களில் வெட்டியாக குறிப்பிட்டுள்ளேன். புகாரில் இரண்டு இடம் என தவறாக தான் உள்ளது. அ.சா.1 நான் கொடுத்த புகார் தான். அதில் தவறுதலாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னை போலீசார் விசாரிக்கும் போது எதிரி எனது கணவரை 3 இடங்களில் வெட்டியதாக சொன்னேன். போலீசார் விசாரிக்கும் போது எதிரி எனது கணவரை இடது பக்க தலையில் வெட்டியதாக சொன்னேன். எதிரியின் தொலைபேசி எண் எனக்குத் தெரியாது. எனது கணவரிடம் எந்த தேதியில் எத்தனை முறை பிரச்சனை செய்தார் என்று எனக்குத் தெரியது. நான் சம்பவத்தைநேரடியாக பார்க்கவில்லை. சொன்ன நாளில்., சொன்ன நேரத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. போலீசாரின்

ஆலோசனையின் பேரில் பின்னால் தயாரிக்கப்பட்ட புகார் என்றால் சரியல்ல. வழக்கிற்கும், எதிரிக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.